*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International

DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p158-163** | Available online at: www.ngmtamil.in

*Original Research Paper*

# வரலாற்று நோக்கில் விரையாச்சிலை

## Virayachilai: A Historical Perspective

**முனைவர்.தி. பாலசுப்பிரமணியன்,**

*உதவி பேராசிரியர், வரலாறு மற்றும் சுற்றுலாவியல் துறை,*

*சமூக அறிவியல் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா*

**Dr. T. Balasubramanian,**

*Special Expert Committee on independendce Museuns, Tamnilnadu Tiourism Department, Govt.of Tamilnadu Secretariat, For St. Geogle, Assistant Professor, Dept.of History and Tourism Studies, School of Social Sciences, Tamilnadu Open University, Chennai – 15 Tamilnadu, India*
*Email: balasubramanian834@gmail.com, Tel:9600248107*

**முனைவர் ஜோ. மார்ட்டின் ஜெயப் பிரகாஷ்**

*இணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,*

*அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி 630003, சிவகங்கை மாவட்டம்.*

**Dr. J. Martin Jeya Prakash,**

*Associate Professor, Department of History, Alagappa Government Arts College, Karaikudi – 630003, Sivagangai District*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 29-07-2026
**Published: 01-08-2026**

*Corresponding Author Email: *:*
*balasubramanian834@gmail.com*
Tel: *+919600248107*

**Abstract:** Virayachilai is an ancient village situated about 23 km southwest of Pudukkottai in Thirumayam Taluk of Pudukkottai District, Tamil Nadu. The village occupies a significant place in the historical geography of the region owing to its rich epigraphical heritage. Inscriptions preserved in its temples constitute valuable primary sources for reconstructing the political, social, economic, religious, and cultural history of the village. They provide information on royal patronage, land endowments, temple administration, taxation, irrigation, and local self-governance during different historical periods. The epigraphical records indicate that Virayachilai flourished under the rule of the Pandyas, Cholas, Vijayanagara rulers, Nayaks, and Tondaimans. These records also demonstrate the continuity of settlement and the evolution of administrative institutions over several centuries. Despite its historical importance, Virayachilai has not received adequate scholarly attention. A comprehensive study of its inscriptions is therefore essential to reconstruct the historical development of the village and to understand its role in the wider historical context of Pudukkottai. Accordingly, this article critically examines the origin, historical growth, and significance of Virayachilai based on epigraphical evidence, thereby contributing to the regional historiography of medieval Tamil Nadu.

**Keywords:** *Virayachilai , Epigraphy, Pudukkottai History*.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.16**

**முன்னுரை**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தில், புதுக்கோட்டைக்கு தென் மேற்கில் சுமார் 23 கி.மீ. தொலைவில் விரையாச்சிலை என்ற ஊர் அமைந்துள்ளது. மேற்படி விரையாச்சிலை ஊரின் தோற்றமும் வளர்ச்சியும் வரலாற்று சிறப்பும் கல்வெட்டுக்கள் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஊரும் பெயர் காரணமும்**

விரையாச்சிலை பாண்டிய நாட்டின் வட எல்லையில் அமைந்துள்ள ஒரு ஊர். வரலாற்றின் மத்திய காலத்தில் விரையாச்சிலை விருதராஜ் பயங்கர வளநாடு என்ற கான நாட்டின் ஓர் ஊர் ஆகும்.

விரையாச்சிலை சிவன் கோவிலிலுள்ள கல்வெட்டுக்கள் இவ்வூரை படைப்பற்றாக குறிப்பதால் வீரச்சாலை என வழங்கப்பெற்று வீரச்சாலை விரையாச்சிலையாக மாறி இருக்கலாம் அல்லது இவ்வூர் சிவன்கோவிலில் முகப்பு மண்டபத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட வீரர்கள் உருவங்கள் தூண்களில் காணப்படுவதால் வீரர் சிலை என்ற பெயர் விரயாச்சிலை என மருவி இருக்கலாம்.

**விரையாசிலை ஓர் படைப்பற்று**

படை பற்று என்ற சொல்லும் பாளையப்பட்டு என்ற சொல்லும் ஒரே பொருள் தரும் இரு சொற்கள் ஆகும்.

பாளையம் என்றால் படை பாளையப்பற்று என்ற சொல் தற்போது பாளையப்பட்டு என்று சொல்லப்படுகிறது. படைப்பற்று, பாளையப்பட்டு இரண்டும் போருக்கு பெருமன்னருக்கு படை தந்துதவும் இடமாகும். விரையாச்சிலை கல்வெட்டுக்கள் இவ்வூரை கானநாட்டு படைப்பற்று என்று சொல்வதால் விரையாச்சிலை பாண்டியர்களுக்கு படை கொடுக்கும் ஒரு ஊர் எனச் சொல்லலாம்.

விரையாச்சிலை மறவர்கள் உள்ள ஊர் என்பதோடு விரையாச்சிலையின் காவல் தெய்வங்களாக உள்ள ஐயனாரில் ஒரு தெய்வம் போருடை ஐயனார் என்ற பெயர் வழக்கும் விரையாச்சிலை படைப்பற்று என்பதை வலியுறுத்துவதாகும்.

**விரையாச்சிலையும் கோவில்களும்**

விரையாச்சிலை ஊரின் நடுவில் உலக விடங்கேஸ்வரர் என்ற சிவன் கோவில் மேற்கில் ஸ்ரீ அடைக்கலம் காத்த அம்பாள் என்ற பிடாரி கோவிலும் ஊரின் மேற்கில் விளாக்காடு அய்யனார் என்ற கோவிலும் ஊரின் வடபுறம் இடர் நீக்கும் விவக்காட ஐயனார், போருடை ஐயனார் ஆகிய கோவில் இவ்வூருக்கு சிறப்பான கோவில்கள் ஆகும். மேற்கண்ட கோவில்களில் இவ்வூரின் சிவன் கோவிலே பழமையான கோவிலாகவும் கல்வெட்டுக்கள் உள்ள கோவில்கலாகவும் உள்ளன.

**கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள்**

இவ்வூர் சிவன் கோவிலில் உள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 32-ஆவது ஆட்சியாண்டுக்கல்வெட்டு விரையாச்சிலை தேவவயல் விலைப் பிராமணம் பற்றிய கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் முன்னாள் குலசேகர தேவற்கு 5-வது எனச் சொல்வதால் இக்குல சேகரதேவரின் காலத்திலேயே இத்தேவவயல் உடைப்பெடுத்த பருமரக்காடாக கிடந்ததை செப்பனிட்டு கொள்ள

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.16**

விரையாச்சிலை ஊரார் விலைக்கு விற்றுக் கொடுத்ததைப் பற்றி மேற்படி தேவவயலில் 6 குலசேகரரின் கல்வெட்டுக்கள் காணப்படுகிறது.

மேற்படி சிவன் கோவில் மேற்புறம் சுவரில் உள்ள மேற்படி குலசேகரரின் 15வது ஆட்சியாண்டு கல்வெட்டில் கோவில் வாசகப்பிட்ச முதலியருக்கு விரையாச்சிலை மற முதலிகள் நிலவிலை பிரமானம் பண்ணி கொடுத்த கல்வெட்டு ஆகும். மேற்படி விரையாச்சிலை சிவன் கோவிலின் தென்புற சுவரில் உள்ள மற்றொரு கல்வெட்டில் உள்ள சீவல பாண்டியன் 10-வது ஆட்சியாண்டு (கி.பி.13ம் நூற்றாண்டு) கல்வெட்டில் விரயாச்சிலை இடைக்குடி மக்களின் கேரளன் சேரனுக்கு,

வயலில் மூன்று அரியும் குறுணி நெல்லும் புஞ்சைக்கு குறுணிதானியமும் பெறக் கட்டளையிட்டமைக்கானது.

மேற்படி சிவன் கோவிலில் உள்ள மாறவர்மன் வீரபாண்டியன் ஆண்டு 1371 சகாப்தம் கல்வெட்டில் மேற்படி மன்னன் பிறந்த நாள் ஜென்ம நட்சத்திரம் செவ்வாய் தோஷம் நீங்குவதற்காக அமுது செய்ய வெட்டப்பட்ட கல்வெட்டு ஆகும்.

இதற்கு அடுத்து மேற்படி கோவிலுள்ள இம்மன்னின் சகாப்தம் 1419 வருசத்தில் சூரக்குடி அரசு பள்ளி கொண்ட பெருமாள் தன்னுடைய பெயரால் விரயாச்சிலை ஈசுவரனுக்கு அமுது செய்ய வழங்கப்பட்டது ஆகும்.

இதற்கு அடுத்துள்ள மற்றொரு கல்வெட்டு இவ்வூர் ஊரவர் விரயாச்சிலையில் பனையன் குழி ஊரணி வெட்டி கொள்ள கல்வாசல் நாட்டு சுந்தர பாண்டியபுரத்து அரவத்து ஊருடையான் என்பவனுக்கு நிலம் விற்று கொடுத்த விலை பிரமானம் பற்றிய கல்வெட்டு ஆகும்.

இக்கோவிலில் உள்ள சுவாமி கோவிலின் தென்புற சுவரில் உள்ள மாறவர்மன் வீரபாண்டியன் ஆட்சியாண்டு சிதைந்த கல்வெட்டு ஒன்று பராக்கிரம பாண்டிய விஜயாலய தேவர் தன்மமாக தந்த படைப்பற்றாக விட்டு நான்கு எல்லையும் திரிசூலம் நான்முக கல்கொடுத்தமைக்கானது. மேற்படி கோவில் சுவாமி கோவிலில் வடபுறம் சுவரில் உள்ள வீரப்பிரதாப தேவ மகாராயர் சகாப்தம் 1395 கால கல்வெட்டு போனமையால் பிராமண தோத்திரத்தில் துக்கைப்பிள்ளை திருமலையாண்டரான இக்கோவில் நாயக நாச்சியரை செய்து கொடுத்தமைக்காக திங்கள் திவசம் சிறப்புக்கு இவருக்கு கோவில் சுதந்திரம் கொடுத்தமைக்கானது.

**திருமாலிருஞ்சோலை வாணரும் விரையாச்சிலை இவர் தன்மமும்.**

வாணர் என்பவர்கள் பிற்கால சோழர் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் குறுநில தலைவர்களாகவும் அரசு அலுவலர்களாகவும் விளங்கியவர்கள் வாணர்களில் ஒருவரான அரவத்தூருடையான் கல்வாயில் நாட்டு சுந்தரபாண்டிய புரத்து அரவத்தூருடையான் பிள்ளையுடையான திருமாலிருஞ்சோலை தாதர் சோதியாழ்வர்க்கு என விராச்சிலையில் இவர் செய்த தர்மங்களை பற்றியும் இவரைப்பற்றியும் கூறுகின்றன. இவர் கல்வாசல் நாட்டு சுந்தரபாண்டிய புரத்து அரவத்தூருடையான் என்பதால் இவர் கல்வாசல் நாட்டு சுந்தரபாண்டியபுரத்தைச் சேர்ந்தவர் என்பதும் அரவத்தூர் இவரது பூர்வீகம் என்பதும் தெரிகிறது. கல்வாசல் நாட்டு சுந்தர பாண்டியபுரம் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கீழச்சீவல்பட்டிக்கு அருகிலுள்ள தற்போதைய

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.16**


பில்லமங்கலம் ஊராகும். திருமாலிஞ்சோலை தாதர் என்றால் மதுரை அழகர்மலை இறைவனது அடிமை என்பது பொருளாகும். பிள்ளையுடையான் என்றால் பிள்ளை பட்டமுடையவர் எனலாம். ஜோதி ஆழ்வார் என்பது இவரது இயற்பெயராகும். இத்திருமாலிருஞ்சோலை வாணர்களது வரலாற்று இடைக்கால வாழ்விடங்களான வாழைக்குறிச்சி ராராபுரம் போன்ற ஊர்களில் ஊரின் நடுவில் நடப்பட்ட தூண்களில் நான்குபக்கமும் பீடத்துடன் கூடிய திரிசூலம், திரிசூலத்தை அமர்ந்த நிலையிலுள்ள குரங்கு திரிசூலத்தை பிடித்துக் கொண்டிருப்பதான வரைகோட்டு உருவம் காணப்படுவது இவர்கள் சிவன் திருமால் இருவரையும் வணங்கக் கூடியவர்கள் என்பதைக் காட்டுவதாகும்.

**விரையாச்சிலை புதிய கல்வெட்டுக் கூறும் செய்திகள்**

நாட்டுக்கோட்டை நகரத்தார் என்பவர் வணிக சமூகத்தவர்களில் ஒருவகையினராவர். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் 9-பிரிவில் இளையாத்தக்குடியார் ஒரு பிரிவினராவர். இளையாத்தக்குடி நகரத்தார்களில் கழனிவாசலுடையாரை கிண்கிணியார் என சில பிரிவுகள் உண்டு. இளையாத்தாக்குடி நகரப்பிரிவில் கழனிவாசலுடையார் கதிராயிரமுடையார், கமுதக்குடையார் பூதமங்கலமுடையார் என்பவர்கள் விரையாச்சிலை சிவன் கோவிலில் சில கற்தூண்களை செய்து வைத்து கல்வெட்டு வெட்டி வைத்துள்ளனர்.

**இடம் :** மேலது

**காலம் :** பொ.ஆ 14-ம் நூற்றாண்டு




**செய்தி** : இந்த தூண் கல்வாசல் நாட்டு சுந்தரபாண்டியபுரத்து கழனிவாசல் ஊரைச் சேர்ந்த கதிராயிரம் முடையர் ஆவுடையார் என்பவர் செய்து கொடுத்துள்ளார்.

**இடம் :** மேலது

**காலம் :** பொ.ஆ 14-ம் நூற்றாண்டு


**செய்தி** : இந்த தூண் விரயாச்சிலை ஊரைச்சேர்ந்த விசையாலையப்ப (அ)ரையர் அகமுடையாள் காடியார் என்பவர் செய்து கொடுத்துள்ளார்.





**இடம் :** மேலது

**காலம் :** பொ.ஆ 14-ம் நூற்றாண்டு

**செய்தி** : இந்த தூண் விரயாச்சிலை ஊரைச்சேர்ந்த விசையாலையப்ப (அ)ரையர் அகமுடையாள் காடியார் என்பவர் செய்து கொடுத்துள்ளார்.







**முடிவுரை**

விரையாச்சிலை சிறப்புக்கு முத்தாய்ப்பாய் உள்ளது. விரையாச்சிலை அடைக்கலம் காத்த அம்மன் கோவில் திருவிழாவும் விலாக்காட ஐயனார் கோவில் குதிரைப்பந்தியுமாகும். இந்த அடைக்கலம் காத்த அம்மன் ஒரு பிடாரி தெய்வமாகும். பிடாரி அம்மனுக்கு காப்புக்கட்டி 10 நாட்கள் நடத்தும் திருவிழாவில் 9-ஆம் நாள் மது எடுப்பு திருவிழா சிறப்பானதாகும். இத்திரு விழாவில் முளைப்போட்ட நாள் முதல் 7-நாள் விரையாச்சிலை வளந்தானை பாட்டு வகைப்பாட்டு என்ற நாட்டுபுற பாடல்கள் முளைவளர்க்க பாடப்படும் பாடளாகும். மது எடுப்பு விரையாச்சிலையிலுள்ள 10-வகை மறவர்களது வயதுக்கு வராத இளம்பெண்களால் மது எடுப்பு நடத்தப்படுவது சங்க கால கொற்றவை வழிபாட்டின் எச்சமாகும். விரையாச்சிலை கானநாடு கோனாடு என்ற இரண்டு நாட்டின் எல்லையில் அமைந்துள்ளதால் இவ்வூர் பிடாரிகோவில் திருவிழாவில் இரண்டு கடா வெட்டப்படுவது சிறப்பாகும். விரையாச்சிலை ஐயனார் கோவில் குதிரைப் பந்தி புதுக்கோட்டையில் வேறு எங்கும் காணமுடியாத சிறப்புடையது.

இது ஒரு படைப்பற்று ஊராக உள்ளதால் இவ்வூர் அந்த காலத்தில் இருந்தே மறவர்கள் பாண்டியருக்காகவும், தொண்டைமான் மன்னர்களுக்காகவும் பலபோர்களில் கலந்து கொண்டதை இவ்வூர் பாட்டு கூறுகிறது. பொதுவாக சொன்னால் பாண்டியர்கள் காலமுதல் படைப்பற்றாளர்களைக் கொண்ட ஊராகவும் விளங்குவதை கல்வெட்டுக்கள் நாட்டுப் புறப்பாடல்கள் வாயிலாக அறியலாம்.

**நூற்பட்டியல்**

[1]. புதுக்கோட்டை சமஸ்தானம் கல்வெட்டு

[2]. ஆவணம் 33 இதழ் தேவாவயல் கல்வெட்டுக்கள்

[3]. விரையாச்சிலை வழங்கும் நாட்டுப்புற பாடல்

[4]. State of Manual of Pudukkottai. Valume Part – II

[5]. புதுக்கோட்டை வரலாறு., ராஜமுகம்மது புதுக்கோட்டை.

[6]. வரலாறு நூல் (கால கோவன்)